செ.வெ.எண்: 333 நாள்: 23.05.2018

# பத்திரிக்கை செய்தி

## திருநெல்வேலி மாவட்டத்தில் TNPSC துறை தேர்வுகள் 24.05.2018 முதல் 31.05.2018 வரை நடைபெறும் மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சந்தீப் நந்தூரி இ.ஆ.ப., அவர்கள் தகவல்

தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத்தால் துறைத்தேர்வுகள் மே 2018 24.05.2018 முதல் 31.05.2018 வரை (முற்பகல் மற்றும் பிற்பகல்) இரு வேளைகளிலும் திருநெல்வேலி மாவட்டத்தில் ஜான்ஸ் மேல்நிலைப்பள்ளி, பாளையங்கோட்டை, மேரி சார்ஜெண்ட் பெண்கள் மேல்நிலைப்பள்ளி, பாளையங்கோட்டை ஆகிய கல்வி நிலையத்தில் வைத்து நடைபெறவுள்ளது. இத்தேர்வினை கண்காணிக்க திருநெல்வேலி கோட்டாட்சியர் தலைமையில் பாளையங்கோட்டை வட்டாட்சியருக்கு பொறுப்புகள் வழங்கப்பட்டுள்ளது. தேர்வு நாளன்று தடைபடாத மின்சாரம் வழங்கவும், பேருந்துகளை தேர்வு மையத்திற்கு சீராக இயக்கக் கேட்டும் சம்பந்தப்பட்ட துறை அலுவலர்களுக்கு உத்திரவிடப்பட்டுள்ளது. தேர்வு நடைபெறும் கல்வி நிலையத்திற்கு காவல் துறை மூலம் போதிய பாதுகாப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது. தேர்வு எழுதுவோர் தேர்வு மையங்களை கண்டறிந்து முன்கூட்டியே தேர்வு எழுத வருமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள். மேலும், தேர்வு அறையினுள் செல்போன்களை எடுத்துச் செல்லக்கூடாது. தேர்வு எழுதுபவர்கள் தவிர இதர நபர்கள் தேர்வு மைய வளாகத்திற்குள் செல்வதற்கு அனுமதி வழங்கப்படமாட்டாது என திருநெல்வேலி மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சந்தீப் நந்தூரி இ.ஆ.ப., அவர்கள் தெரிவிக்கிறார்.

வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம்,திருநெல்வேலி